## குமார வரதாசார்யர் அருளிச் செய்த
## பிள்ளையந்தாதி

### தனியன்

சீரார் தூப்புல் பிள்ளை அந்தாதி என்று செழுந்தமிழால்
நேராக வேதாந்த தேசிகர் தாளிணைக் கீழ் மொழிந்தான்
ஏரார் மறைப் பொருள் எல்லாம் எடுத்து இவ்வுலகு உய்யவே
சீராகிய வரதாரியன் பாதம் துணை நமக்கே

---

## குமார வரதாசார்யர் அருளிச் செய்த
## பிள்ளையந்தாதி

** மாமலர் மன்னிய மங்கை * மகிழ்ந்துறை மார்பினன் தாள் *
தூமலர் சூடிய தொல்லருள் ** மாறன் துணை அடிக் கீழ்
வாழ்வை உகக்கும் * இராமானுச முனி வண்மை போற்றும்
சீர்மையன் * எங்கள் தூப்புல் பிள்ளை பாதம் என் சென்னியதே 1

சென்னி வணங்கச் * சிறு பனி சோர என் கண்ணிணைகள் *
வெந்நரகங்களும் வீய வியன் கதி இன்பமேவ **
துன்னு புகழுடைத் தூப்புல் துரந்தரன் தூமலர்த் தாள்
மன்னிய * நாள்களும் ஆகுங்கொல் * மாநிலத்தீர் நமக்கே 2

மாநிலத்து ஓதிய * மாமறை மன்னிய நற்கலைகள் *
ஆனவை செய்யும் அரும்பொருள் அத்தனையே அருளும் **
தூநெறி காட்டும் இராமானுச முனித் தோத்திரம் செய் *
ஊனமில் தூப்புல் ஐயன் * ஓர் புகழ் அன்றி உய்வில்லையே 3

உய்யும் வகை இல்லை * உத்தர வேதியுள் வந்துதித்த *
செய்யவள் மேவிய சீர் அருளாளரைச் ** சிந்தை செய்யும்
மெய்யவன் எந்தை * இராமனுசன் அருள் மேவி வாழும்
ஐயன் * இலங்கு தூப்புல் பிள்ளை ஆய்ந்த பொருள் அன்றியே 4

அன்று இவ்வுலகினை ஆக்கி * அரும்பொருள் நூல் விரித்து *
நின்று தன் நீள் புகழ் வேங்கட மாமலை மேவி ** பின்னும்
வென்றிப் புகழ் திருவேங்கடநாதன் எனும் குருவாய் *
நின்று நிகழ்ந்து * மண்மேல் நின்ற நோய்கள் தவிர்த்தனனே 5

வித்தகன் வேதியன் * வேதாந்த தேசிகன் எங்கள் தூப்புல் *
மெய்த் தவன் உத்தமன் வேங்கடநாதன் வியன் கலைகள் **
மொய்த்திடு நாவின் முழக்கொடு வாதியர் மூலம் அறக் *
கைத்தவன் என்று உரைத்தேன் * கண்டிலேன் என் கடுவினையே 6

வினைகாள் உமக்கு * இனி வேறோர் இடம் தேட வேண்டும் * எனைச்
சின மேவி முன் போல் சிதைக்கும் வகை இங்கு அரிது கண்டீர் **
என் எனில் இராமானுச முனி இன்னுரை சேரும் * தூப்புல்
புனிதன் * என் புந்தி புகுந்து திகழ்ந்து பொருந்தினரே 7

பொருந்திப் புவி தனில் * பொய் வாழ்க்கை பூண்கின்ற பூரியர்காள் *
இருந்து நரகின் இடர் கெடும் ஆற்றை அறிகின்றிலீர் **
பொருந்தும் பொருள் ஒன்று கேளீர் * பொங்கும் இவ்விடர்க் கடற்கு
வருந்தாது * தூப்புல் மாபூருடன் பாதம் வணங்குமினே 8

வணக்கம் ஒடுக்கம் * வழக்கம் ஒழுக்கம் இரக்கம் சேரும் *
இணக்கம் உறக்கம் இழுக்கும் அழுக்கும் இகந்து நிற்கும் **
குணக் குலம் ஓங்கும் இராமானுசன் குணம் கூறும் * தூப்புல்
அணுக்கனைப் பிள்ளை தனை * அரணாக அடைபவர்க்கே 9

அடைபவர் தீவினை மாற்றி * அருள் தரும் தூப்புல் ஐயா! *
இடர் தரும் இப்பிறவிக் கடல் தன்னில் அமிழ்ந்த என்னை **
கடையறப் பாசம் கழற்றி நின் தாளிணை காணும் வண்ணம் *
உடையவனே! அருளாய் * உணர்ந்தோர் தங்கள் கற்பகமே 10

கற்பகமே என்று * காசினியோரைக் கதிக்க மாட்டேன் *
வெற்பிடையே நின்று வெந்தவத் தீயிலும் வேவ மாட்டேன் **
பற்பல கலை வல்ல பாவலனே! பத்தர் ஏத்தும் தூப்புல் *
அற்புதனே! அருளாய் * அடியேனுக்கு அரும்பொருளே 11

பொருள் ஆனதொன்றும் * என்னில் பொருந்தாதும் அன்றி அந்தோ! *
மருளே மிகுத்து மறையவர் நல் வழி மாற்றி நின்றேன் **
தெருளார் மறை முடித் தேசிகனே! * எங்கள் தூப்புல் தேவே!
அருளாய் * இனி எனக்கு உன்னருளே அன்றி ஆறில்லையே 12

ஆறாக எண்ணும் * அருங்கருமம் ஞானம் காதல் கொண்டு *
வேறாக நிற்கும் விரகு எனக்கில்லை விரத்தி இல்லை **
தேறாது திண்மதி சீரார் கதியிலும் செம்பொன் மேனி *
மாறாத தூப்புல் மாலே! * மறவேன் இனி நின் பதமே 13

நின் பதம் தன்னிலும் * நேரே எனக்கில்லை அன்பு கண்டாய் *
நின் பதம் ஒன்றிய அன்பரிலும் நேசம் இல்லை அந்தோ! **
என் படி கண்டு இனி என் பயன் ஏதமில் தூப்புல் எந்தாய்! *
உன் படியே அருளாய் * உதவாய் எனக்கு உன்னருளே 14

உன்னருள் அன்றி * எனக்கொரு நல்துணை இன்மையினால் *
என்னிரு வல்வினை நீயே விலக்கி இதம் கருதி **
மன்னிய நல் திருமந்திரம் ஓதும் பொருள் நிலையே *
பொன்னருளால் அருளாய் * புகழ் தூப்புல் குலவிளக்கே! 15

விளக்காகி * வேங்கட வெற்பினில் வாழும் விரை மலராள் *
வளக் காதல் கொண்டு உறை மார்பன் திறத்தும் உனதடியார் **
துளக் காதல் இல்லவர் தங்கள் திறத்திலும் தூய்மை எண்ணிக் *
களக் காதல் செய்யும் நிலை கடியாய் * தூப்புல் காவலனே! 16

** காவலர் எங்கள் * கிடாம்பிக் குலபதி அப்புளார் தம் *
தேமலர்ச் சேவடி சேர்ந்து பணிந்து ** அவர் தம் அருளால்
நாவலரும் தென் வட மொழி நற்பொருள் பெற்ற * நம்பி
காவல தூப்புல் குலத்தரசே! * எம்மைக் காத்தருளே 17

அருள் தரும் ஆரண தேசிகனே! * எங்கள் தூப்புல் தேவே! *
வரு கவி தார்க்கிக சிங்கமே! * வாதியர் வாழ்வறுத்தாய் **
இரு கையும் கூப்பி உரைக்கும் இவ்விண்ணப்பம் ஒன்று கேளாய் *
உருவ எனக்கு அருளாய் * எண்ணும் உள்ளம் உன் தொண்டரையே 18

** தொண்டர் உகக்கும் துணை அடி வாழி! * நின் தூமுறுவல்
கொண்ட முகம் வாழி! * வாழி வியாக்கியா முத்திரைக் கை **
வண்திருநாமமும் வாழி! * மணி வட முப்புரி நூல்
கொண்ட சீர்த் தூப்புல் குலமணியே! * வாழி நின் வடிவே 19

** வடிவழகு ஆர்ந்த * வண் தூப்புல் வள்ளல் மென் மலரடி மேல் *
அடியவர் ஓத அந்தாதி இருபதும் ஆய்ந்துரைத்தேன் **
திடமுடன் ஈதைத் தினந்தொறும் ஆதரித்து ஓதும் அன்பர் *
முடியிடை நேர் படும் * தூப்புல் அம்மான் பத மாமலரே 20

**குமார வரதாசார்யர் திருவடிகளே சரணம்**

---